சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 2025-26 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – கல்வி - விடுதிகள் - 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை 12 கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்த நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை

அரசாணை (நிலை) எண். 65 நாள் 11.07.2025

விசுவாவசு, ஆனி 27

திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டது

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.DBC/115/2025-C1, நாள் 09.05.2025, 16.05.2025, 21.05.2025 மற்றும் 18.06.2025.

******

ஆணை:

2025-26 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் விடுதிகளில், கல்லூரி மாணவ, மாணவியர் நலன் கருதி, குறைவான மாணவர் சேர்க்கை உள்ள 12 பள்ளி விடுதிகள் ரூபாய் 4 கோடியே 15 இலட்சத்து 16 ஆயிரம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்" என்ற அறிவிப்பு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் 1358 விடுதிகளில் குறைவான மாணவ/மாணவியர் சேர்க்கையினைக் கருத்திற்கொண்டு, தேவைக்கேற்ப பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படுவதாகவும் அதன்படி கீழ்க்காணும் 12

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.

| வ எண் (1) | தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளி விடுதியின் பெயர் (2) | ஒப்பளிக்கப் பட்ட மாணாக்கர் எண்ணிக்கை (3) | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் அமைய உள்ள விடுதியின் பெயர் (4) | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் ஒப்பளிப்பு கோரும் மாணாக்கர் எண்ணிக்கை (5) |
|---|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, அரியலூர், அரியலூர் மாவட்டம். | 90 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அரியலூர் அரியலூர் மாவட்டம். | 100 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். | 56 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் | 100 |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 50 | பிற்படுத்தப்பட்டோர் நலக் ஐடிஐ (ITI) மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 100 |
| 4 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 50 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 100 |
| 5 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, கலியராயன்விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, புதுப்பட்டி (கலியராயன்விடுதி), புதுக்கோட்டை மாவட்டம். | 100 |
| 6 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, திருமயம், புதுக்கோட்டை, மாவட்டம். | 60 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, திருமயம், புதுக்கோட்டை மாவட்டம். | 100 |
| 7 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் | 60 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் | 100 |
| 8 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம் | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளிமாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் | 100 |
| 10 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 80 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 100 |
| 11 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம். | 55 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம் | 100 |
| 12 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவர் விடுதி, ஆலங்குடி புதுக்கோட்டை மாவட்டம். | 60 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, ஆலங்குடி புதுக்கோட்டை மாவட்டம். | 100 |

3. மேற்காணும் 12 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகளை, கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்த ஏதுவாக கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

i. பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தப்படும் போது பள்ளி விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களை மறுபகிர்வு செய்து, இடைநிலை காப்பாளர் பணியிடத்தை பட்டதாரி காப்பாளர் பணியிடமாக தரம் உயர்த்தி புதியதாக தேவைப்படும் பணியிடங்களை கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | பதவி | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | அரசாணையின்படி பள்ளி விடுதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய /தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பட்டதாரி காப்பாளர்/ காப்பாளினி | 12 | 5 | 7 |
| 2 | சமையலர் | 24 | 24 | 0 |
| 3 | காவலர் / ஏவலர் | 12 | 10 | 2 |
| 4 | தூய்மை பணியாளர் | 12 | 12 | 0 |

ii. தரம் உயர்த்தப்பட வேண்டிய 7 பட்டதாரி காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய 2 காவலர்/ ஏவலர் பணியிடங்கள் IFHRMS-இல் Mapping செய்யப்பட வேண்டும்.

iii. தரம் உயர்த்தப்படவுள்ள 12 பள்ளி விடுதிகளில். மாணவ மாணவியரின் எண்ணிக்கை 100 ஆக ஒப்பளிப்பு செய்யப்பட உள்ளதால், கூடுதல் அறைகள், குளியல் அறைகள், மற்றும் கழிப்பறைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு தேவையாக உள்ளது.

iv. 12 பள்ளி விடுதிகளை தரம் உயர்த்தி 12 கல்லூரி விடுதிகளாக தொடங்கப்படுவதால் ஏற்படும் தொடர் மற்றும் தொடரா செலவின விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

(A) தொடர் செலவினம்

- பள்ளி விடுதிகளில் ஒரு மாணவருக்கு உணவு கட்டணமாக ரூ.1400/- (ஒரு மாதம்), சிறப்பு உணவுக் கட்டணமாக ரூ.40/- (ரூ.40 x 5 பண்டிகைகள்) மற்றும் பல்வகை செலவினமாக ரூ.100/- (ஒரு மாதம்) வழங்கப்படுகிறது. கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தும் பட்சத்தில் ஒரு மாணவருக்கு இதற்காக முறையே ரூ.1500/-, ரூ.80/- மற்றும் ரூ.150/- வழங்கிட வேண்டும். இதனால் ஒரு மாணவருக்கு முறையே உணவு கட்டணத்திற்கு ரூ.100/- (per month). சிறப்பு உணவு கட்டணத்திற்கு ரூ.40/-. பல்வகை செலவினத்திற்கு ரூ.50/- (per month) என கூடுதல் செலவினம் ஏற்படும்.
- மேலும் பள்ளி விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையினை விட கூடுதலாக கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கான ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையினை 100 என நிர்ணயிக்கும் நிலையில் கூடுதல் இடங்களுக்கு உணவுக் கட்டணமும், சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் பல்வகை செலவினம் ஆகியவை முழுமையாக வழங்கப்பட வேண்டும்.
- இடைநிலைக் காப்பாளர் பணியிடம் போதகக் காப்பாளர் பணியிடமாக தரம் உயர்த்தும் போது ஆண்டிற்கு ஏற்படும் ஊதிய வித்தியாசத் தொகை மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்படும் 2 காவலர்/ஏவலர் பணியிடங்களுக்கான ஊதியம் ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

(B) தொடரா செலவினம்

12 பள்ளி விடுதிகள், 12 கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தி தொடங்குவதால் அவ்விடுதிகளுக்கு, செம்மொழி நூலகம், மின் நூலகம், CCTV கேமரா 5 எண்ணிக்கை, தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம், பாத்திரங்கள், சுகாதார குட்டைத் தகளி மற்றும் தரம் உயர்த்தப்படும் பள்ளி விடுதிகளில் கட்டுமானம் பராமரிப்பு பணிகள் ஆகியவற்றுக்காக ரூ.2,29,20,000/- நிதி ஒதுக்கீடு போன்றவை வழங்கப்பட வேண்டும்.

| தொடர் மற்றும் தொடரா செலவின விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | செலவின வகை | பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை (4 விடுதிகள்) (ரூ) | மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (5 விடுதிகள்) (ரூ) | சீர்மரபினர் நலத்துறை (3 விடுதிகள்) (ரூ) | மொத்தம் (ரூ) |
| 1 | தொடர் செலவினம் | 52,54,316/- | 56,26,616/- | 37,76,328/- | 1,46,57,260/- |
| 2 | தொடரா செலவினம் (கட்டுமானம் (ம) பராமரிப்பு செலவினம் உட்பட) | 88,90,000/- | 1,11,25,000/- | 55,25,000/- | 2,55,40,000/- |
| | மொத்தம் | 1,41,44,316/- | 1,67,51,616/- | 93,01,328/- | 4,01,97,260/- |

4. எனவே, நடப்பாண்டில் (2025-26) 12 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல பள்ளி மாணவர்/ மாணவியர் விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்த தேவையான தொடர் செலவினம் ரூ.1,46,57,260/- மற்றும் தொடரா செலவினம் ரூ.2,55,40,000/- (கட்டுமானம் (ம) பராமரிப்பு செலவினம் உட்பட) என மொத்த செலவினம் ரூ.4,01,97,260/-னை உரிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, கீழ்க்கண்டவற்றின் மீது அரசு ஆணையிடுகிறது.

i. மேலே பத்தி-2ல் காணும் அட்டவணையில் இடம்பெற்றிருக்கும் 12 பள்ளி விடுதிகளை நிலை உயர்த்தி 12 கல்லூரி விடுதிகளாக அதே இடங்களில் தொடங்க அனுமதியும், அவ்வட்டவணையின், கலம் -5-இல் குறிப்பிட்டவாறு, உயர்த்தப்பட்ட மாணவ/ மாணவியர் எண்ணிக்கைக்கு ஒப்பளிப்பும், பாலர் மாற்றம் செய்யப்படும் விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள், அந்தந்த பாலின விடுதிகளுக்கேற்ப பணியிடங்களும் பாலர் மாற்றம் செய்வதற்கு அனுமதியும் வழங்கப்படுகிறது.

ii. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 7 இடைநிலை காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்களை போதகக் காப்பாளர்/ காப்பாளினி (நிலை-16, ரூ.36400-134200) பணியிடங்களாக இவ்வரசாணையின் இணைப்பு II-ல் உள்ளவாறு தரம் உயர்த்துவதற்கும் மற்றும் 2 காவலர்/ஏவலர் (நிலை-1, ரூ.15700-53100) பணியிடங்களை இவ்வரசாணையின் இணைப்பு III-ல் உள்ளவாறு புதிதாகத் தோற்றுவிப்பதற்கு , புதிதாகத் தோற்றுவிக்கப்படும் 2 காவலர்/ஏவலர் பணியிடங்களுக்கு நிதியளவில் இணையான இவ்வரசாணையின் இணைப்பு IV – ல் உள்ளவாறு 2 சமையலர் பணியிடங்களை சரணடைப்பு செய்யவும் அனுமதி வழங்கப்படுகிறது.

iii. தரம் உயர்த்தப்படவுள்ள 12 பள்ளி விடுதிகளில். மாணவ மாணவியரின் எண்ணிக்கையை 100 எண்ணிக்கை கொண்டதாக ஒப்பளிப்பு செய்யப்பட உள்ளதால், கூடுதல் அறைகள், குளியல் அறைகள், மற்றும் கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. இவ்வாறு 12 பள்ளி விடுதிகளை 12 கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படக்கூடிய தொடர் செலவினம் ரூ.1,46,57,260/- மற்றும் தொடரா செலவினம் ரூ.2,55,40,000/- (கட்டுமான (ம) பராமரிப்பு செலவினம் உட்பட) என மொத்த செலவினம் ரூ.4,01,97,260/-க்கு (ரூபாய் நான்கு கோடியே ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூற்று அறுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ரூ.1,41,44,316/-</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30101 | 13,81,200 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277-AA-30301 | 7,70,196 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30106 | 19,800 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30102 | 3,600 |
| | 08 | மருத்துவப்படி | | |
| 5. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277-AA-36709 | 26,89,000 |
| | 09 | ஏனையவை | | |
| 6. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 35,520 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 7. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 3,55,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| | | | (அ) மொத்தம் | 52,54,316 |
| தொடரா செலவினம் | | | | |
| 8. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-03-277-AA-31901 | 1,50,000 |
| | 01 | வாங்குதல் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | 334 | ஏனைய செலவுகள் | 2225-03-277-AA-33402 | 2,00,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீ கள் வாங்குதல் | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 20,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 11. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-03-277-AA-37601 | 3,20,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 12. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 2,00,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 13. | | 4225 - ஆதிதிராவிடர் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், 277-கல்வி மாநிலச் செலவினங்கள், JY-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல், 416- பெரும்பணிகள், 01-பெரும்பணிகள் | 4225-03-277-JY-41601 | 80,00,000 |
| | | | (ஆ) மொத்தம் | 88,90,000 |
| | | | (அ + ஆ) பெரு மொத்தம் | 1,41,44,316 |

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் ரூ.1,67,51,616/-</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225- 03- 277-BC-30101 | 6,79,200 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277- BC-30301 | 3,85,416 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277- BC-30106 | 9,600 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277- BC-36709 | 40,18,000 |
| | 09 | ஏனையவை | | |
| 5. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225- 03- 277- BC-30501 | 44,400 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 6. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277- BC-32401 | 4,90,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| | | | (அ) மொத்தம் | 56,26,616 |
| தொடரா செலவினம் | | | | |
| 7. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225- 03- 277- BC-31901 | 2,00,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225- 03- 277- BC-32401 | 2,50,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 9. | 334 | ஏனைய செலவுகள் | 2225- 03- 277- BC-33402 | 2,50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03- 277- BC-30501 | 25,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 11. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225- 03- 277- BC-37601 | 4,00,000 |
| | 01 | வாங்குதல் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | | | 4225 - ஆதிதிராவிடர் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், 277-கல்வி மாநிலச் செலவினங்கள், JZ - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல், 416 - பெரும்பணிகள், 01-பெரும்பணிகள் | 4225-03-277-JZ-41601 | 1,00,00,000 |
| | | | | (ஆ) மொத்தம் | 1,11,25,000 |
| | | | | (அ+ஆ) பெரு மொத்தம் | 1,67,51,616 |

**<u>சீர்மரபினர் நல விடுதிகள் ரூ.93,01,328/-</u>**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 80 – பொது – 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் - மாநிலச் செலவினங்கள் – AF – சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-80-101-AF-30101 | 10,41,600 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-80-101-AF-30301 | 5,77,488 |
| | 01 | அகவிலைப்படி | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-80-101-AF-30106 | 15,000 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-80-101-AF-30102 | 3,600 |
| | 08 | மருத்துவப்படி | | |
| 5. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-80-101-AF-36709 | 18,57,000 |
| | 09 | ஏனையவை | | |
| 6. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-80-101-AF-30501 | 26,640 |
| | 01 | தொலைபேசி கட்டணங்கள் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-80-101-AF-32401 | 2,55,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| | | | (அ) மொத்தம் | 37,76,328 |
| | | தொடரா செலவினம் | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-80-101-AF-32401 | 1,50,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 9. | 334 | ஏனைய செலவுகள் | 2225-80-101-AF-33402 | 2,50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிற்காகும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-80-101-AF-30501 | 15,000 |
| | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | | |
| 11. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-80-101-AF-37601 | 2,40,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 12. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-80-101-AF-31901 | 50,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | | 4225 - ஆதிதிராவிடர் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், 277-கல்வி மாநிலச் செலவினங்கள், JZ - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல்,416-பெரும்பணிகள், 01-பெரும்பணிகள் | 4225-03-277-JZ-41601 | 49,20,000 |
| | | | (ஆ) மொத்தம் | 55,25,000 |
| | | | (அ+ஆ) பெரு மொத்தம் | 93,01,328 |

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான நிதியொதுக்கம் ரூ.4,01,97,260/- 2025-26 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2025-26 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி.மி.பி.(ம)சிரு/வ.செ.பொ.-I]த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை இத்துறையின் மின் கோப்பு எண் (efile No) 10363631/பிந1(2)/2025-ல் குறிப்பு எண் #51, நாள் 07.07.2025 மற்றும் பணியிட பேரேட்டு எண்.202507PSL0113 குறிப்பு எண் #58, நாள் 10.07.2025-ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். IFHRMS ASL No. 2025070700

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை- 5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை- 5.
மாநில கணக்காயர், சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1),
சென்னை-18 (பெயரில்).

மாநில கணக்காயர் (தணிக்கை- 2),
சென்னை-18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு அமைச்சர் சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர்
நலன், அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (பி, மிபி(ம)சிந)/வ.செ.பொதுI/ வ.செ.பொதுII/
வ.வ.I/மை.ம.ஆ.பி)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்
11/07/2025

## இணைப்பு-I

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

12 பள்ளி விடுதிகளை 12 கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துதல் விவரம்

| வ எண் | தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளி விடுதியின்பெயர் | ஒப்பளிக்கப் பட்ட மாணாக்கர் எண்ணிக்கை | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் அமைய உள்ள விடுதியின் பெயர் | கல்லூரி விடுதியாக தரம் உயர்த்திய பின் ஒப்பளிப்பு கோரும் மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, அரியலூர், அரியலூர் மாவட்டம். | 90 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அரியலூர் அரியலூர் மாவட்டம். | 100 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். | 55 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் | 100 |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 50 | பிற்படுத்தப்பட்டோர் நல ஐடிஐ (ITI) மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 100 |
| 4 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 50 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 100 |
| 5 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, கலியராயன்விடுதி, புதுக்கோட்டை மாவட்டம். | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, புதுப்பட்டி (கலியராயன்விடுதி), புதுக்கோட்டை மாவட்டம். | 100 |
| 6 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, திருமயம், புதுக்கோட்டை மாவட்டம். | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, திருமயம், புதுக்கோட்டை மாவட்டம். | 100 |
| 7 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் | 60 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் | 100 |
| 8 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம் | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளிமாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் | 50 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம் | 100 |
| 10 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 80 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 100 |
| 11 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம். | 55 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம் | 100 |
| 12 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவர் விடுதி, ஆலங்குடி புதுக்கோட்டை மாவட்டம். | 60 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, ஆலங்குடி புதுக்கோட்டை மாவட்டம். | 100 |

**சா.விஜயராஜ் குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

பெ.[signature] 11/07/2025
**பிரிவு அலுவலர்**
11/07/2025

## இணைப்பு-II

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

### 7 இடைநிலை காப்பாளர் பணியிடங்களை போதக காப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்படும் விடுதிகளின் விவரம்

| பள்ளி விடுதிகளில் உள்ள இடைநிலை காப்பாளர் பணியிடங்களின் விபரம் | | | போதக காப்பாளராக தரம் உயர்த்தி வழங்க வேண்டிய கல்லூரி விடுதிகளின் விபரங்கள் (நிலை-16, ரூ.36400-134200) | |
|---|---|---|---|---|
| வரிசை எண். | பள்ளி விடுதிகளின் விபரங்கள் | இடைநிலை காப்பாளர் பணியிடங்களின் எண்ணிக்கை | கல்லூரி விடுதிகளின் விபரங்கள் | தரம் உயர்த்தப்பட வேண்டிய போதக காப்பாளர் பணியிடங்களின் எண்ணிக்கை |
| 1 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, அரியலூர், அரியலூர் மாவட்டம் | 1 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அரியலூர், அரியலூர் மாவட்டம் | 1 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். | 1 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். | 1 |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 1 | பிற்படுத்தப்பட்டோர் நலக் ஐடிஐ (ITI) மாணவர் விடுதி, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம். | 1 |
| 4 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம். | 1 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, பவானி, ஈரோடு மாவட்டம். | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம். | 1 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, காவேரிப் பாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம். | 1 |
| 6 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, அருப்புக் கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 1 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, அருப்புக் கோட்டை, விருதுநகர் மாவட்டம். | 1 |
| 7 | சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம். | 1 | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, ஆலந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம். | 1 |
| | **மொத்தம்** | 7 | **மொத்தம்** | 7 |

**சா.விஜயராஜ் குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

11/07/2025
**பிரிவு அலுவலர்**
11/07/2025

## இணைப்பு-III

(அரசாணை (நிலை) எண். 65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**புதிதாகத் தோற்றுவிக்கப்படும் 2 காவலர்/ ஏவலர் பணியிடங்கள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் | காவலர் / ஏவலர் (நிலை-1, ரூ.15700-58100) |
|---|---|---|---|
| 1 | விருதுநகர் | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, இராஜபாளையம், | 1 |
| 2 | புதுக்கோட்டை | சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, ஆலங்குடி | 1 |
| மொத்தம் | | | 2 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

11/07/2025
பிரிவு அலுவலர்

11/07/2025

## இணைப்பு-IV

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**2 சமையலர் பணியிடங்கள் சரண் செய்யப்படும் விவரம்**

| மாவட்டம் | விடுதியின் பெயர் | சமையலர் |
|---|---|---|
| தென்காசி | பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி, மைப்பாறை | 2 |
| | மொத்தம் | 2 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

11/07/2025
பிரிவு அலுவலர்
11/07/2025

## இணைப்பு- V (1)

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**பிற்படுத்தப்பட்டோர், நலப் பள்ளி விடுதிகள் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடர் செலவினம்**

| வ. எண் (1) | பொருட்கள் (2) | 4 விடுதிக்கான செலவின தொகை ரூ. (3) |
|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் | 25,78,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 1,11,000 |
| 3. | பல்வகை கட்டணம். | 3,55,000 |
| 4. | தொலைபேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு (740 x12x4) | 35,520 |
| 5 | 3 இடை நிலை காப்பாளர் பணியிடம் போதக காப்பாளராக தரம் உயர்த்தும் போது ஆண்டிற்கு ஏற்படும் ஊதிய வித்தியாச செலவினம் (537108x3=1611324) | 16,11,324 |
| 6 | புதிய பணியிடம் ( 1 இரவு காவலர் / ஏவலர்) ஆண்(ரூ.563472) | 5,63,472 |
| | மொத்தம் | 52,54,316 |

**சா.விஜயராஜ் குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

(கையொப்பம்) 11/07/2025
**பிரிவு அலுவலர்**
11/07/2025

## இணைப்பு V (2)

(அரசாணை (நிலை) எண். 65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**5 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதிகள் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடர் செலவினம்**

| வ.எண்<br>(1) | பொருட்கள்<br>(2) | 5 விடுதிக்கான செலவின தொகை<br>ரூ.<br>(3) |
|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் | 38,70,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 1,48,000 |
| 3. | பல்வகை கட்டணம். | 4,90,000 |
| 4. | தொலைபேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு<br>(740 x12x5) | 44,400 |
| 5 | 2 இடை நிலை காப்பாளர் பணியிடம் போதக காப்பாளராக தரம் உயர்த்தும் போது ஆண்டிற்கு ஏற்படும் ஊதிய வித்தியாச செலவினம் (ரூ.537108x2=1074216) | 10,74,216 |
| | மொத்தம் | 56,26,616 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
11/07/2025

## இணைப்பு-V (3)

(அரசாணை (நிலை) எண். 65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**3 சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகள் தரம்உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடர் செலவினம்**

| வ. எண் (1) | பொருட்கள் (2) | 3 விடுதிக்கான செலவின தொகை ரூ. (3) |
|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் | 17,76,000 |
| 2. | சிறப்பு உணவுக் கட்டணம் | 81,000 |
| 3. | பல்வகை கட்டணம். | 2,55,000 |
| 4. | தொலைபேசி கட்டணம் ஒரு வருடத்திற்கு (740 x12x3) | 26,640 |
| 5 | 2 இடை நிலை காப்பாளர் பணியிடம் போதக காப்பாளராக தரம் உயர்த்தும்போது ஆண்டிற்கு ஏற்படும் ஊதிய வித்தியாச செலவினம் (ரூ.537108x2=1074216) | 10,74,216 |
| 6 | புதிய பணியிடம் (1 இரவு காவலர் மற்றும் ஏவலர்) பெண்(ரூ.5,63,472) | 5,63,472 |
| | மொத்தம் | 37,76,328 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
11/07/2025

# இணைப்பு – V(4)

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

4 பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவ / மாணவியர் விடுதிகள் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடரா செலவினம்

| வ. எண். (1) | பொருட்கள் (2) | ஒரு விடுதிக்கான செலவின தொகை ரூ. (3) | 4 விடுதிக்கான செலவின தொகை ரூ. (கலம் 3x4) |
|---|---|---|---|
| 1 | செம்மொழி நூலகம் | 50,000 | 200000 |
| 2 | மின் நூலகம் | 80,000 | 320000 |
| 3 | CCTV கேமரா எண்ணிக்கை | 1,00,000 | 1,00,000 (ஒரு விடுதிக்கு மட்டும்) |
| 4 | தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம். | 5,000 | 20,000 |
| 5 | பாத்திரங்கள் | 50,000 | 200000 |
| 6 | சுகாதாரக் குட்டைத் தகளி | 25,000 | 50,000 (இரு விடுதிகளுக்கு மட்டும்) |
| 7 | தரம் உயர்த்தப்படும் 4 பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி விடுதிகளுக்கு தண்ணீர் வசதி, கூடுதலாக கழிவறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளிட்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு விடுதிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் | 2000000 | 8000000 |
| | | மொத்தம் | 8890000 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

[signature] 11/07/2025
பிரிவு அலுவலர்

11/07/2025

## இணைப்பு – V(5)

(அரசாணை (நிலை) எண். 65 , பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

**5 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவ / மாணவியர் விடுதிகள் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடரா செலவினம்**

| வ.எண்<br>(1) | பொருட்கள்<br>(2) | ஒரு விடுதிக்கான செலவின தொகை ரூ.<br>(3) | 5 விடுதிக்கான செலவின தொகை ரூ.<br>(கலம் 3x5) |
|---|---|---|---|
| 1 | செம்மொழி நூலகம் | 50,000 | 2,50,000 |
| 2 | மின் நூலகம் | 80,000 | 4,00,000 |
| 3 | CCTV கேமரா எண்ணிக்கை | 1,00,000 | 100000 |
| 4 | தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம். | 5,000 | 25,000 |
| 5 | பாத்திரங்கள் | 50,000 | 2,50,000 |
| 6 | சுகாதார குட்டைத் தகளி | 25,000 | 100000 (4 விடுதிகளுக்கு மட்டும்) |
| 7 | மேலும், தரம் உயர்த்தப்படும் 5 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு தண்ணீர் வசதி, கூடுதலாக கழிவறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளிட்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு விடுதிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் | 20,00,000 | 1,00,00,000 |
| மொத்தம் | | | 1,11,25,000 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

(கையொப்பம்) 11/07/2025
பிரிவு அலுவலர்

(கையொப்பம்) 11/07/2025

## இணைப்பு – V(6)

(அரசாணை (நிலை) எண்.65, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 11.07.2025-ன் இணைப்பு)

### 3 சீர்மரபினர் நலப் பள்ளி மாணவ / மாணவியர் விடுதிகள் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படும் தொடரா செலவினம்

| வ.எண் (1) | பொருட்கள் (2) | ஒரு விடுதிக்கான செலவின தொகை ரூ. (3) | 3 விடுதிக்கான செலவின தொகை ரூ. (கலம் 3x3) |
|---|---|---|---|
| 1 | செம்மொழி நூலகம் | 50,000 | 1,50,000 |
| 2 | மின் நூலகம் | 80,000 | 2,40,000 |
| 3 | தொலைபேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம். | 5,000 | 15,000 |
| 4 | பாத்திரங்கள் | 50,000 | 1,50,000 |
| 5 | சுகாதார குட்டைத் தகளி | 25,000 | 50,000 |
| 6 | தரம் உயர்த்தப்படும் 3 சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகளுக்கு தண்ணீர் வசதி, கூடுதலாக கழிவறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளிட்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு விடுதிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் | 20,00,000 | 49,20,000 |

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

11/07/2025
பிரிவு அலுவலர்

11/07/2025